**தலைப்பு 233 – அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 233 – அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஜூலை 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, இவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்

கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்கள ஏடுகளின் படி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 22,438,708 தொகையும், திறைசேரி அச்சுப் பிரதி (SA–52) படி ரூபா 22,459,367 தொகை காணப்பட்டமையால் ஆரம்ப மீதிகளிடையே ரூபா 20,659 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. 1996 ஆண்டிற்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்படுகின்ற இந்த வித்தியாசம் மீளாய்வாண்டின் போதும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மீதிகளிடையே ரூபா 20,659 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்படுகின்றதெனவும், அந்த வித்தியாசம் 1996 ஆண்டிற்கு முன்னர் இருந்து காட்டப்படுகின்ற மீதிகளின் வித்தியாசமாக காணப்படுவதனால் 2023 ஆண்டைப் போலவே 2024 ஆண்டிலும் அந்த வித்தியாசத்தை ஏடுகளில் இருந்து பதிவளிப்பதற்கான அங்கீகாரம் வழங்கும் படி திறைச்சேரியிடம் வேண்டப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதிகள் ஏடுகளில் உட்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் உபகரணங்கள் கண்டறியப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| Zero Air Generator மூன்று இயந்திரங்கள், எட்டு CPU மற்றும் மூன்று Pen drive அப்புறப்படுத்தியிருந்த போதிலும் அவற்றில் Zero Air Generator ஒன்று CPU நான்கு அலகுகளில் மற்றும் ஒரு Pen drive கொள்வனவு விலை ஏடுகளில் இருந்து திறைசேரி அச்சுப் பிரதி (SA-82) இருந்து அகற்றியிருக்காமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதியை சித்தரித்துக் காட்டவில்லை. | 2023 ஆண்டின் போது 02 Zero Air Generator, 04 CPU மற்றும் 02 Pen உட்பட 96 பண்டங்கள் அப்புறப்படுத்தப்பட்டு ரூபா 3,835,421 தொகைக்கான பெறுமதியொன்று நிதியல்லாத சொத்துக்களில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், அதனை திறைசேரி அச்சுப் பிரதி (SA-82) அட்டவணையில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. இறுதிக் கணக்குகளில் 24 ஆம் பக்கத்தில் அந்தத் தகவல்கள் உட்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதிகள் ஏடுகளில் உட்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்பட்டிருக்காமை**

திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் நாளதுவரையாக பேணிச் சென்றிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **சேதங்கள் தொடர்பான பதிவு**<br>நிதிப் பிரமாணம் 110 இற்கு இணங்க சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | சேதங்கள் நட்டங்கள் தொடர்பான பதிவேடு சரியாக நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 110 ஏற்பாடுகளுக்கு இணங்க அதன் கீழ் காணப்படும் படிவத்தின் படி சேதங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்ல வேண்டும். |

**(ஈ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது விபத்துக்கு உள்ளாகிய இரண்டு வாகனங்கள் தொடர்பான கோப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட கோப்புக்கள் நிதிப் பிரமாணம் 104 அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவின் உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை அறிக்கை கிடைக்கப் பெறாமையால் அந்தக் கோப்புகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க முடியாமல் உள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்விற்கு குறிப்பிட்ட கோப்புக்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 03/2022 மற்றும் 2022 ஏப்ரல் 26 திகதிய அரச செலவுகளை கட்டுப்படுத்தல் தொடர்பான சுற்றறிக்கையின் பிரிவு 03(xvii) படி ஆண்டினுள் செலவிடுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் மீதிகள் காணப்படின், அவற்றை வருடம் முடிவதற்கு முன்னர் ஏனைய செலவுகளுக்காக பயன்படுத்தக்கூடாதிருந்தது. எனினும், 02 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ரூபா 9,750,000 தொகை நிதிப் பிரமாணங்களின் மூலம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாட்டு தொகையை வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்படாமை, வழக்குச் சான்றுப் பண்டங்கள் அதிகமான எண்ணிக்கையானவைகள் தொடர்பாக பகுப்பாய்வு அறிக்கைக்ள வழங்குதல் மற்றும் ஆண்டின் போது பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்தல் ஆகிய காரணங்களினால் செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்கு முடியாமல் போனமையால் மீதிகள் காணப்பட்ட செலவு விடயங்களில் இருந்து ஏற்பாடுகளை மாற்றுவதற்கு நேரிட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பாதீட்டு மதிப்பீடு முடிந்தளவு முழுமையாக மற்றும் சரியாக தயாரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாட்டு வரையறைக்குள் செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் 05 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக நிதிப் பிரமாணம் 66 மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் கீழ் ஏனைய குறிக்கோள்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 35,750,000 இற்கான ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தன. செலவு விடயங்களிடையே அவ்வாறு மாற்றப்பட்ட சதவீதம் 4 சதவீதம் முதல் 68 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சொன்றினை கொண்டிருந்தது. | ஓட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ள வாகனங்கள் மிகவும் பழமையானவையாக காணப்பட்டமையால் திருத்த வேலைகளுக்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் அதிகரித்தல், பூர்த்தி செய்யப்பட்ட பகுப்பாய்வு அறிக்கைகள் அதிகரித்தனால் தபால் செலவுகள் அதிகரித்தல் மற்றும் 2023 ஆண்டின் போது கிடைத்திருந்த வழக்குச் சான்றுப் பண்டங்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தமையால் புதிய போதைப்பொருள் ஆய்வுகூடமொன்று தற்காலிகமாக நிறுவப்பட்டு, அந்தப் பிரிவின் வழக்குச் சான்றுப் பண்டங்களை களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான பண்டங்கள் மற்றும் புதிய அறிக்கைகள் அச்சிடுதல் தொடர்பாக தேவையான வசதிகள் ஏற்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்டது என அறிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்கண்டு முன்கூட்டிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமை மற்றும் சிறந்த முகாமைத்துவத்துடனான ஏற்பாடுகள் செலவிடப்படாமையால் மீளாய்வாண்டின் போது ஐந்து செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 139,000,000 இற்கான ஏற்பாடுகள் நூறு வீதமும் சேமிக்கப்பட்டிருந்தது. | கொய்கா செயற்திட்டம் தொடர்பாக இலங்கை குற்றவியல் நீதி விசாரணை செய்யும் முறைமையில் சட்ட வைத்திய பகுப்பாய்வு கொள்திறனை கட்டியெழுப்புவதை வலுப்படுத்தவதற்கான நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 139,000,000 இற்கான ஏற்பாடுகள் மீதியாகியிருந்ததுடன், குறிப்பிட்ட செயற்திட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய சொத்துக்கள் மற்றும் அதனொடு தொடர்புடைய செலவுகளை கணக்கீடு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட காலப் பகுதியினுள் | முறையான ஆய்வொன்றுடன் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அந்த அலுவல்கள் மேற்கொள்ளப்படாமையால் இவ்வாறு ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் திணைக்களத்திற்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காத செலவு விடயம் ஒன்றிற்காக (1405) ரூபா 712,971 இற்கான பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | துப்புறவு ஏற்பாடு மற்றும் சேவைகள் தொடர்பான ஏற்பாடுகள் 2023 ஆண்டில் 233-1-1-0-1409 செலவு விடயத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2024 ஆண்டின் போது திறைசேரியினால் அந்த செலவு விடய செலவுகள் பல வகைகளாக பிரிக்கப்பட்டிருந்தமையால் அந்த செலவு விடயம் தொடர்பாக பொறுப்புக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியான செலவு விடயங்களுக்கு உரிய பெறுமதிகள் ஏடுகளில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) திறைசேரி அச்சுப் பிரதி (SA-92) படி செலவு விடயம் ஒன்றிற்காக ரூபா 85,589,829 இற்கான பொறுப்புக்களுக்கு அணுகியிருந்த போதிலும், அந்த பொறுப்புக்கள் திணைக்களத்தின் பொறுப்புக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 233-1-1-1-2103 இன் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 85,589,829 இற்கான பெறுமதி திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் கணக்கீடு செய்யப்பட்ட செலவொன்றாக காணப்படுவதுடன், அதனை 2023 ஆண்டில் ஈடுபாட்டுப் பொறுப்பொன்றென தவறுதலாக காட்டப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டிருந்தது. | அனைத்துப் பொறுப்புக்களும் பதிவேட்டில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (இ) நி.பி. 94(1) இற்கு இணங்க வேறு முறையொன்றின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பம் தவிர வருடாந்த மதிப்பீடுகளில் அதற்கான நிதி ஏற்பாடுகள் காணப்பட்டால் அன்றி ஏதேனும் திணைக்களம் ஒன்றினால் வேலை அல்லது சேவை ஒன்று அல்லது வழங்குவதற்காக ஏதேனும் செலவுகள் அல்லது பொறுப்புகளுக்கு கடப்பாடு ஒன்று ஏற்படுத்தக் கூடாது எனினும், மீளாய்வாண்டின் 02 மூலதனச் | அவ்வாறு ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகியிருத்தல் நி.பி. 94(2) கீழ் காணப்படும் ஏற்பாடுகளின் படி என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவு விடயங்களுக்கான ஏற்பாடுகளில் சேமிப்பை மிகைத்து ரூபா 446,170 தொகை பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்காத ரூபா 54,480 இற்கான பொறுப்புக்கள் 2024 ஆண்டின் போது தீர்க்கப்பட்டிருந்தது. | 233-1-1-1-1301 செலவு விடயத்தின் கீழ் குறிக்கப்பட்டுள்ள ரூபா 21,300 தொகை மற்றும் ரூபா 26,000 தொகை உட்பட வாகன திருத்த வேலைச் செலவுகள் பொறுப்புக்கள் பதிவேட்டில் உட்படுத்த வேண்டியிருந்த இரண்டு செலவுகள் என ஏற்றுக்கொள்வதுடன். 223-1-1-0-1201 செலவு விடயத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த செய்தித்தாள் பில் பத்திரத்தின் இன்வொயிஸ் திகதி 2024 ஆண்டு ஆகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய அனைத்துப் பொறுப்புக்களும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 85,589,829 தொகை பெறுமதியான இயந்திரம் ஒன்று செலவுக் கூற்றில் (ACA-2(ii)) காசேட்டின் படி செலவு வரிசையில் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் கூற்றில் (இணைப்பு iii) செலுத்த வேண்டிய பொறுப்பொன்றென காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் ஏற்பாடுகளின் கீழ் கிடைத்திருந்த ரூபா 85,589,829 தொகை திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக திணைக்களத்தினால் தற்காலிகமாக பதியப்பட்ட ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் பதிவினை அகற்றாமையால் அது பொறுப்புக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதிகள் கணக்கு ஏடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38 ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ள வேண்டிய போதிலும், அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வொன்று மேற்கொண்டு அதன்படி முறைமை செயற்திறனுடன் நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதென்பதற்காக கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38 ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | உள்ளகக் கணக்காய்வு கடமைகள் உரிய முறையில் செயற்படுத்துவற்காக செயற்திறனுடனான செய்முறையொன்று காணப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோத்தரினால் சான்றுபடுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் பந்தி 5.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களின் படி அந்தத் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2023 ஆண்டின் போது வெற்றிடமாக காணப்படுவதனால் நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் திணைக்களம் கணக்காணிக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38 ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| | 104(4) | - | வாகன விபத்துக்கள் தொடர்பாக குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக உரிய விடயப் பொறுப்பதிகாரிக்கு வாய்மொழி மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன், எழுத்துமூலம் அறிவுரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| | 772(2)(ஆ) | 74,155 | பண்டங்களுக்கான ஏல விற்பனையின் போது ஏல விற்பனை செய்யப்பட்ட பண்டங்கள் தொடர்பான பதிவேட்டில் குழு அங்கத்தவர்களினால் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | ஏல விற்பனையின் பின்னர் குறிப்பிட்ட இரண்டு பட்டியல்களிலும் கையொப்பம் பெற்றுக்கொள்ளல் நடைபெறவில்லை. அத்துடன், 2024 ஆண்டு முதல் அவ்வாறு செயற்படுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | 772(உ) | - | விற்பனை செய்யப்பட்ட பண்டங்களும், அவற்றுக்கான கிடைத்திருந்த விலைகளும், அழிக்கப்பட்ட பண்டங்கள் தொடர்பான சபை அங்கத்தர் ஒருவரின் சான்றிதழ் சபையின் அறிக்கையுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | ஏல விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் விலைகள் உட்படுத்தப்பட்டு தனியான அறிக்கையொன்று கையொப்பமிடப்படவில்லை எனவும், எதிர்காலத்தில் அவ்வாறு செயற்படுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1646 | - | திணைக்களத்திற்கு சொந்தமான 24 வாகனங்களுக்காக 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது குறிப்பிட்ட ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. | உரிய முறையில் சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | அரச கணக்கு வழிகாட்டல் 2023 நவம்பர் 30 திகதிய 2023/05 இலக்கம் கொண்ட வழிகாட்டலின் பந்தி 06 | - | அறிக்கையிடும் நிறுவனங்களின் அறிக்கைகளுக்கு உரிய தகவல்கள் காணப்படாத சந்தர்ப்பங்களில் வெற்று அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ஏடுகளிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்று மற்றும் காணாமல் போன உறுதிச் சீட்டுக்கள் தொடர்பான கூற்று தொடர்பாக திணைக்களத்தினால் நிதிக் கூற்றுக்களில் வெற்று அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. | ஏடுகளிலிருந்து பதிவழிப்பது தொடர்பான கூற்றிற்கு மற்றும் காணாமல் போன உறுதிச் சீட்டுக்கள் தொடர்பான கூற்றிற்கு உட்படுத்துவதற்காக ஏடுகளிலிருந்து பதிவழித்தல் மற்றும் காணாமல் போன உறுதிச் சீட்டுக்கள் காணப்படாமையால் வெற்று அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாததுடன், எதிர் காலத்தில் அந்த நிலைமையை சரி செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்கு வழிகாட்டல்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 2.5 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 9.1(ஆ) மற்றும் நிதிப் பிரமாணம் 371(5) இணங்க துணைக் கட்டுநிதியொன்று வழங்கப்பட்ட பின்னர் குறிப்பிட்ட கருமம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த துணைக் கட்டுநிதியை மீண்டும் தீர்க்க வேண்டியிருந்த போதிலும், உத்தியோகத்தரினால் 27 சந்தர்ப்பத்தில் பெற்றிருந்த ரூபா 764,000 இற்கான துணைக் கட்டுநிதி தீர்ப்பதற்காக 12 நாட்கள் முதல் 49 நாட்கள் வரை கால வீச்சொன்றில் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் 2023 ஆண்டில் அறிவுருத்தப்பட்டதுடன், அவ்வாறு முற்பணம் பெற்றுக்கொள்ளும் விருந்துபசார நடவடிக்கை பல நாட்களாக நடைபெறும் சந்தர்ப்பங்களில் மற்றும் கணினி துணைக் கருவிகள் மற்றும் மின்சார துணைக் கருவிகள் ஆகியவை பல கடைகளிலிருந்து தேடிப்பார்த்து கொள்வனவு செய்வதற்கு நேரிடும் சந்தர்ப்பங்களில் இவ்வாறு மீண்டும் தீர்த்தல் தாமதமடைய நேரிடுகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியில் கட்டுநிதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | குறிப்பிட்ட செலவு உரிய முறையில் மதிப்பீடு செய்யப்படாமல் முற்பணத் தொகைகள் பெற்றுக்கொண்டிருந்ததுடன், அதன்படி பெற்றுக்கொண்ட பணம் மற்றும் செலவிடப்பட்ட தொகை இடையே 27 சதவீதத்திலிருந்து 76 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்பு காணப்பட்டது. | தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்து மிகை மதிப்பீடு மேற்கொள்ளக் கூடாது என உத்தியோகத்தர்களுக்க்கு அறிவுறுத்தப்பட்டதுடன், எதிர் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களில் என்பது சதவீதம் செலவிடப்படாவிடின் அது தொடர்பாக விளக்கமொன்று முற்பணத்தை தீர்க்கும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி செயற்பாட்டை சரியாக இனங்கண்டு அதன்படி செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனைத்து திணைக்களங்களும் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டை செயற்படுத்துவதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன், அடுத்த ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் நடைமுறையாண்டு திசெம்பர் 15 திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டிருக்காததுடன், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரமும் பெற்றிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சுக்கு 2022 திசெம்பர் 20 திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன், அங்கீகரிக்கப்பட்ட பின்னர் பிரதியொன்று திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை என அறிவிக்கின்றேன். | செயல் நடவடிக்கைத் திட்டம் குறிப்பிட்ட தினத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேற்கூறிய சுற்றறிக்கையின் 03 பந்தியில் வழிகாட்டல் இலக்கம் 12 இற்கு இணங்க வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பொறுப்புத் துறை மற்றும் ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் கருமங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் வருடாந்தம் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் கருமங்கள் தெளிவாக காட்டப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | 2023 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மீளாய்வாண்டின் போது திருத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | குறிப்பிட்ட அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி மீளாய்வாண்டின் போது ஆறு மூலதன தொழிற்பாடுகளுக்காக ரூபா 225 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தொழிற்பாடுகள் செயற்படுத்தியிருக்கவில்லை. | கொய்கா செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 139,000,000 இற்காக ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் கீழ் சொத்துக்கள் கொள்வனவு செய்யும் செய்முறை மற்றும் கட்டிடங்களை நவீனமயப்படுத்தும் குறிப்பிட்ட காலத்தினுள் மேற்கொள்ளப்படாமையால் இவ்வாறு ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கருமங்களுக்கு முக்கியத்துவம் வழங்கி செயற்பட வேண்டும். |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் 12 பிரிவுகளுக்காக 12,189 வழக்குகள் விசாரணைக்கு ஆளாக்கப்பட்டு பகுப்பாய்வு அறிக்கை வழங்குவதற்கு மீதியாக இருந்ததுடன், மேலும் 58,886 வழக்குகள் கிடைத்திருந்தது. அவற்றில் 2023 ஆண்டில் அறிக்கையிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 53,253 தொகை காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு பகுப்பாய்வு செய்து அறிக்கைகள் வெளியிடுவதற்காக 17,822 வழக்குகள் மீதியாக இருந்தது. அவை 2023 ஆண்டினுள் கிடைத்திருந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு அறிக்கை வெளியிடுவதற்காக காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையில் 30 சதவீதம் ஆகும். | ஒட்டுமொத்த பதவியணி 350 ஆக காணப்பட்டதுடன், தற்போது வெற்றிட பதவிகளின் எண்ணிக்கை 110 இல் 31 தொகை இலங்கை அறிவியல்சார் சேவை ஆக காணப்பட்டதுடன், அவ்வாறான நிலைமையில் 2023 ஆண்டில் பகுப்பாய்வுக்காக காணப்பட்ட 71,075 வழக்குகளில் 53,253 வழக்குகள் ஆண்டின் போது பகுப்பாய்வு செய்யப்பட்டது எனவும், அது ஆண்டின் ஒட்டுமொத்த வழக்கு எண்ணிக்கையின் 75 சதவீதம் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | பதவியணி சிக்கல்களை தீர்த்துக்கொண்டு வெளியீட்டு மட்டத்தை அதிகரித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இவ்வாறு விசாரணை மேற்கொண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த வழக்குகளின் எண்ணிக்கையில் 885 தொகை 2014 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதிக்குரியவை என அவதானிக்கப்பட்டது. | பகுப்பாய்வுக்குரிய முழுமையற்ற தகவல்கள் மற்றும் முழுமையற்ற வழக்குப் பண்டங்கள் சமர்ப்பித்தல் ஆகிய காரணங்களினால் இதுவரை பகுப்பாய்வு பூர்த்தி செய்ய முடியாதிருந்த வழக்குப் பண்டங்கள் எண்ணிக்கையொன்று காணப்படுவதுடன் பழைய வழக்குப் பண்டங்களில் பகுப்பாய்வுக்கு முக்கியத்துவம் வழங்கும் படி பிரிவுத் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதென அறிவிக்கப்பட்டது. | பழைய வழக்குகளின் எண்ணிக்கையை விரைவாக தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 – 2024 காலப் பகுதிக்காக கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (KOICA) மூலம் திணைக்களத்தின் கொள்திறனை அபிவிருத்தி செய்வதற்காக 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான மானியம் ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக ரூபா 100 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், KOICA நிறுவத்தினால் செலவு ஏதும் அறிவித்திருக்கவில்லை. | 2023 ஆண்டிற்காக செயற்திட்ட அலுவலகத்தினால் செலவுகள் ஏதும் அறிவிக்கப்படவில்லை என அறிவித்துக்கொள்கின்றேன். | வெளிநாட்டு உதவிகள் மூலம் கிடைக்கின்ற இந்த பணத்தை எதிர்பார்க்கும் கருமங்களுக்காக செயற்திறனுடன் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 04/2018 நிதியல்லாத சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்யும் வழிகாட்டலின் 1.3.4 இன் படி வாகனமொன்றிற்கு ஏற்பட்டிருந்த விபத்தின் போது ரூபா 5 இலட்சத்துக்கு மிகையான திருத்த வேலைச் செலவொன்று மேற்கொள்ள நேரிட்டால் திருத்த வேலையின் பின்னர் அதன் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டியதுடன், அந்த பெறுமதி மதிப்பீட்டின் பெறுமதி வாகனத்தின் பெறுமதி என கணிக்க வேண்டியிருந்த போதிலும் வாகனம் ஒன்றின் விபத்தின் பின்னர் ரூபா 2,835,853 தொகை செலவிடப்பட்டு திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் திருத்த வேலையின் பின்னர் அந்த | இந்த வாகனம் முகவர் நிலையம் ஒன்றினால் திருத்த வேலை மேற்கொண்டு வழங்கப்பட்டுள்ளதுடன், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனத்தை பெறுமதி மதிப்பீடு செய்து பெறுமதியினை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | மேற்கூறிய வழிகாட்டலின் 2.3 , 3.3.1 மற்றும் 4.3 பந்திகளுக்கு இணங்க ஒவ்வொரு 05 வருட காலத்திற்கும் ஒருமுறை காணிகள் மற்றும் கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக மீண்டும் பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறு செயற்படுத்தியிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு தொடர்பான வழிகாட்டலின் படி மேற்கொள்ளப்படவில்லை என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. 2024 ஆண்டில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.6 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்கள் பிணை வைப்பு தொடர்பாக 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 09 ஆவது பந்தியினால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 880 இன் படி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பிணை வைத்தல் தொடர்பாக அரச நிதி ஆகியவற்றின் கட்டுக்காப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான பொறுப்புக்கள் கணக்கீட்டு அலுவலர்களிடம் காணப்படுவதனால் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களினால் பிணை வைக்கப்படுகின்ற என பொறுப்பாக இருக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 315 பிணை வைக்கப்பட வேண்டிய கணக்காளர், காசாளர் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர் போன்ற பதவிகள் வகிக்கும் உத்தியோகத்தர்களினால் குறிப்பிட்ட பிணைப் பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | நீதி அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடியவாறு அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்புக் கட்டளைச் சட்டங்கள் திருத்தப்பட வேண்டியுள்ளதெனவும், அதன்படி எதிர் காலத்தில் அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டமையால் அதுவரை பிணை வைத்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

### 3.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தில் 2003 பெப்ரவரி 14 திகதி ஏற்பட்டிருந்த தீ விபத்தின் மூலம் ரூபா 2,229,111 தொகைக்கான சேதம், நட்டங்கள் மற்றும் கைவிடல் தொடர்பான கூற்றில் பதியப்பட்டிருந்த போதிலும் அதனை அறவீடு செய்வதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக திணைக்களத்தில் காணப்படும் கோப்பில் நட்டத்தின் எண்ணிக்கை தயாரிக்கப்பட்ட முறை காட்டப்பட்டிருக்காததுடன், நட்டத்தை அறவீடு செய்வதற்கு தரப்பினர் ஒருவர் விசாரணைகளின் போது இனங்கண்டிருக்காமையால் ஏடுகளிலிருந்து பதிவளிப்பதற்கான அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | சேதங்கள் மற்றும் நட்டங்களை அறவீடு செய்வதற்காக அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.8 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள பெண் உத்தியோகத்தர் ஒருவரிடம் 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 18,754 இற்கான இடர் கடன் மீதி மற்றும் உத்தியோகத்தர் ஒருவரிடம் 03 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 2,400 இற்கான விசேட முற்பணக் கடன்மீதி மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு கடன் மீதியை செலுத்தும் படி அறிவிக்கப்பட்ட போதிலும், குறிப்பிட்ட கொடுப்பனவுகள் தீர்க்கப்பட்டிருக்காததுடன், இந்த உத்தியோகத்தர் இருவர் தொடர்பான வழக்கு அலுவல்கள் தற்போதும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கு முடியாது காணப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சேவையை விட்டுச் சென்றுள்ள இரண்டு உத்தியோகத்தர்களிடம் கூட்டுத்தொகை ரூபா 427,345 தொகைக்கான கடன்மீதிகளை அறவீடு செய்வதற்காக | ஒரு பெண் உத்தியோகத்தர் 2024 மார்ச் மாதம் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டதனால் நிலுவைக் கடன் மற்றும் வட்டியை 2024 மார்ச் மாதம் | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முதல் மீண்டும் அறவீடு செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அடுத்த பெண் உத்தியோகத்தரிடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதியை தீர்க்கும் படி அறிவிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2019 ஜுன் 27 திகதி அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 05/2019 இன் 3(அ) பந்திக்கு இணங்க உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்று வந்த பின்னர் அல்லது உத்தியோகத்தர் ஒருவர் மாற்றம் பெற்றுச் சென்று மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் திணைக்களங்களிடையே தீர்க்கப்படாத கடன் மீதிகள் காட்டப்படாமல் இருப்பதற்காக பொறுப்பாக இருக்க வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்திலிருந்து மாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஏழு உத்தியோகத்தர்களிடம் கூட்டுத்தொகை ரூபா 1,429,506 தொகைக்கான கடன் மீதிகளை தீர்த்துக்கொள்வதற்காக 04 மாதங்கள் முதல் 11 மாதங்கள் வரையின் காலம் கடந்திருந்ததுடன், இடமாற்றம் பெற்று வந்திருந்த ஐந்து உத்தியோகத்தர்களின் கூட்டுத்தொகை ரூபா 1,064,668 தொகைக்கான கடன் மீதிகளை தீர்த்துக்கொள்வதற்காக 05 மாதங்களுக்கும் 06 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்தது. | இவ்வாறு கடன் மீதிகளை தீர்த்துக்கொள்வதில் கால தாமதம் ஏற்பட்டிருந்தது எனவும் இந்த கடன் மீதிகள் தீர்க்கப்படுவது குறிப்பிட்ட திணைக்களங்களினால் ஆகும் எனவும், உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுவதனால் முற்பண பீ கணக்கு மற்றும் சிராப்பராக கடமை புரிவது ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் காணப்படுவதனால் ஆண்டின் போது அந்த கடன் மீதிகளை சாட்டுதல் செய்தல மற்றும் ஏற்றுக்கொள்ளல், தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தினால் விஷேடத்துவ உத்தியோகத்தர்கள் தமது கடமை நேரத்துக்கு வெளியே மேற்கொள்ளும் சேவைகளுக்களுக்கான கட்டணங்கள் 2016 ஆண்டின் பின்னர் திருத்தமொன்று மேற்கொண்டிருக்கவில்லை. அதேபோல் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிட்டிருந்த 2015 திசெம்பர் 11 | 2024 ஆண்டில் கட்டணம் திருத்தம் தொடர்பாக கோறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளதென அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய PFD/04/08/01/59 இலக்கம் கொண்ட கடிதத்தின் படி கட்டணத் திருத்தங்கள் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்பட்டு உரிய முறையில் திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | | |
| (உ) | சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொண்டு வெளிநாடு சென்றிருந்த திணைக்களத்தின் பெண் உத்தியோகத்தர்கள் இருவர் மீண்டும் சேவைக்கு வருகை தந்திருக்காததுடன், அந்த இரண்டு பெண் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,260,935 இற்கான முழுத் தண்டப் பணத் தொகையினை அறவீடு செய்வதற்காக இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தப் பணத்தை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைக்காக கௌரவ சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதன்படி இந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கைக்கு இணங்க அந்தப் பணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | வெளிநாட்டு சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொண்டு 2021 ஆண்டு வெளிநாடு சென்றிருந்த சிரேஷ்ட உதவிப் பகுப்பாய்வாளர் அந்த நாட்டில் நோய்வாய்ப்பட்ட காரணத்தினால் 2022 ஒக்தோபர் மாதம் மீண்டும் இலங்கைக்கு வந்திருந்ததுடன், அந்த உத்தியோகத்தருக்கு பாடநெறி கட்டணம் உட்பட ஏனைய செலவுகளுக்காக ரூபா 6,281,948 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் பாடநெறி கட்டணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 5,224,681 இற்கான தொகையில் ரூபா 4,816,556 இற்கான தொகையொன்று பல்கலைக்கழகத்தினால் மீண்டும் செலுத்தியிருந்ததுடன், மீதித் தொகையாகிய ரூபா 408,125 தொகை மற்றும் அதற்கு மேலதிகமாக திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,057,267 இற்காக தொகையினை அறவீடு செய்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உத்தியோகத்தருக்கு மீளளிப்பு செய்ய வேண்டிக் காணப்பட்ட மின்சாரக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளின் மூலம் இந்தத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | பாடநெறிக்காக அரசினால் செலவிடப்பட்ட தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | அதேபோல் இந்த உத்தியோகத்தர் இந்த நாட்டிற்கு 2022 ஒக்தோபர் 28 திகதி வந்திருந்த போதிலும் வெளிநாடு சென்ற காலப் பகுதிக்கான விடுமுறைகள் கணக்காய்வுத் திகதியாகிய 2024 மார்ச் 30 திகதி அளவிலும் அங்கீகரித்துக்கொண்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட காலத்திற்குரிய விடுமுறைக்கான அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறவிக்கப்பட்டுள்ளது. | |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழக்குச் சான்றுப் பண்டங்கள் பகுப்பாய்வின் பின்னர் வழங்கப்படுகின்ற விஞ்ஞான ரீதியான அறிக்கை 03 மாதத்தினுள் வழங்குதலை குறிக்கோளாக கொண்டு நான்கு செயலாற்றுகை சுட்டிகள் அறிமுகப்படுத்தியிருந்ததுடன் அவற்றில் ஒரு சுட்டி என முன்னைய ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற பகுப்பாய்வுகள் தொடர்ந்தும் மீதியாக காணப்படுகின்ற வழக்குச் சான்றுப் பண்டங்கள் / மாதிரிகள் / விசாரணைகளுக்குரிய பகுப்பாய்வு அறிக்கைகள் நடைமுறை ஆண்டினுள் வழங்கி முடிக்க வேண்டியது இலக்காக இருந்த போதிலும் அந்தக் குறிக்கோள்களை நெருங்குவது 59 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பப்படாமை 2023 ஆண்டின் போது மிகையான வழக்குச் சான்றுப் பண்டங்கள் கிடைத்திருந்தமையால் பகுப்பாய்வு அறிக்கைகள் வழங்குதல் தாமதமடைந்திருந்ததுடன், அதன் காரணமாக எதிர்பார்த்த இலக்கை நோக்கி நெருங்குவதற்கு முடியாமல் போனது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நோக்கி நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இரண்டு ஆய்வுகூடங்களை நவீனமயப்படுத்தல் 70 சதவீத முன்னேற்றமொன்று இலக்காக இருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் அது 40 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. | ஆய்வுகூடங்களை நவீனமயப்படுத்தல் கொய்கா உதவியின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன், பெறுகை செய்முறையின் படி கொய்கா நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் மூலம் இந்த நவீனமயப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதனால் செயற்திட்டத்தில் ஆரம்பத்தில் | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நோக்கி நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்ட கால சட்டகத்தின் படி முன்னேற்றம் இலக்காக இருந்த போதிலும், இந்த திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட செய்முறை ஒன்றென அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**5. நல்லாளுகை**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 40(i) இன் படி திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2023 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்படுகின்றமையால் நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

**5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சடடத்தின் 41(1) அனைத்து நிறுவனங்களுக்காகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று நிறுவப்பட்டிருக்க வேண்டிய போதிலும் திணைக்களத்திற்காக அவ்வாறான குழுவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று நிறுவப்பட்டு உரிய அங்கீகாரத்திற்காக வரிசை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் அலுவல்கள் செயற்திறனுடன் மேற்கொள்வதற்கு உதவக்கூடிய தீர்மானங்கள் எடுப்பதற்கு தேவைப்படும் சிரேஷ்ட மட்ட 35 உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட 10 உத்தியோத்தர்களில் 07 பேருடைய பதவி வெற்றிடங்கள் காணப்படுவதனால் திணைக்களத்தின் அலுவல்கள் சிறந்த முறையில் நடாத்திச் செல்வதற்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் படி 2022 ஆண்டு முதல் ஆட்சேர்ப்பு மேற்கொள்ள முடியாமல் இருந்ததெனவும், தேவையான அங்கீகாரத்திற்காக தொடர்ச்சியாக வரிசை அமைச்சின் மூலம் விண்ணப்பிக்கப்பட்ட போதிலும், பல்கரும சேவை உத்தியோகத்தர் தவிர ஏனைய ஆட்சேர்ப்புக்கள் இதுவரை மேற்கொள்ளப்படாததுடன், பாரிய எண்ணிக்கையான வெற்றிடங்கள் காணப்படுவதனால் திணைக்களத்தின் அலுவல்களை சிறந்த முகாமைத்துவம் செய்துகொள்வதற்கு முடியாமல் இருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் குறிக்கோள்கள் மற்றும் முக்கிய கருமங்கள் செயற்திறனுடன் நிறைவேற்றிக் கொள்வதற்காக பதவிகளுக்குரிய பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஜனவரி 24 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் பந்தி 6.1 இற்கு இணங்க பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்குமாக ஒரு வருடத்திற்கு குறைந்த அளவு 12 மணித்தியாளத்திற்கு குறையாத பயிற்சிச் சந்தர்ப்பம் ஒன்று மனிதவள திட்டத்தினுள் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு பயிற்சி திட்டமொன்று செயற்படுத்துவற்கு திட்டமிட்டிருக்கவில்லை. | வெளியிட்டிருந்த சுற்றறிக்கையின் வரையறைகளின் கீழ் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் படி சேவைத் தேவைப்பாட்டினை கவனத்தில் எடுத்து தேவையான பயிற்சிகள் மற்றும் இலவசமாக வழங்கப்படும் பயற்சிகளுக்கு மாத்திரம் மேற்கூறிய வரையறுக்கப்பட்ட தேவைப்பாடுகளின் படி பங்களிப்புச் செய்யப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | பதவியணியின் செயற்திறனை அதிகரித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |